சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.19.08.2025.
OS.No. 748/2018
PW1 : ஷியாமளா தேவி (வயது 62 ) க/பெ. இளங்கோவன்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**<u>1,2,3,9 பிரதிவாதிகள் தரப்பு கு.வி</u>**

எனது சொந்த ஊர் திருச்சி, உறையூர்.1,2 பிரதிவாதிகள் எனது உடன் பிறந்த தங்கைகள். 3 ஆம் பிரதிவாதி எனது தங்கை உமாதேவியின் மகன். எனது தகப்பனார் பெயர் ஞானவேல். எனது அம்மா பெயர் ராஜலெட்சுமி. எனது கணவர் பெயர் இளங்கோவன். நான் பொதுவாக கையொப்பம் செய்யும்போது, எனது கணவர் பெயரை சேர்த்து கையொப்பம்போடுவேனா என்றால் திருமணத்திற்கு பிறகு அவ்வாறு தான் கையொப்பம் செய்வேன்.

எத்தனை அயிட்ட சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 7 அயிட்ட சொத்துக்கள். அதற்கான சர்வே எண்கள் ஞாபகம் இல்லை.மேற்படி சர்வே எண்களுக்கான விஸ்தீரணம் மற்றும் நான்கெல்லைகள் தெரியுமா என்றால் தெரியாது. வயல்கள் அனைத்தும் சிறுமருதூர், கீழவாளாடி கிராமத்தில் உள்ளது. வீடு மட்டும் நம்பர்1 டோல்கேட், ஆனந்தா நகரில் உள்ளது.

எனது அம்மா வீட்டுகுடித்தனம் என்றால் சரிதான். தொழில் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் போலிஸ் இன்ஸ்பெக்டராக இருந்தார், அவர் ஓய்வு பெறும்போது நம்பர் 1 டோல்கேட்டில் இருந்தார். எனது அம்மாவிற்கு சிறுநீரக கோளாறு நோய் இருந்தது. அவருக்கு திருச்சி, புத்தூர், சுந்தரம் மருத்துவமனையில் சிகிச்சை கொடுத்தோம். என்ன சிகிச்சை கொடுத்தோம் என்றால் டயாலிசிஸ் சிகிச்சை கொடுத்தோம், எனது தாயார் 2013ல் இறந்தார்.

**<u>கு.வி தொடர்ச்சி</u>** - வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் மறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ signed/
ஷியாமளாதேவி

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

sd/-Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி